முதலாவது கூடுதல் உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.

நாள். 01.09.2025

O.S. 266/2014

பி,வா.சா.1 - விஜயகுமார்

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை.

1) 1971 ஆண்டின் பி.வா.சா.ஆ.33 ஆவணமானது 1ம் வாதி திருமணத்திற்கு முன்பே ஏற்படுத்தப்பட்ட ஆவணம் என்றால் சரி. பி.வா.சா.ஆ. 33 ம் ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள சொத்திற்கும் வழக்கு சொத்திற்கும் சம்மந்தம் உள்ளது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.33 ல் உள்ள சொத்துகள் செட்டிதெருவில் உள்ளது. பி.வா.சா.ஆ. 33 ல் உள்ள சொத்தும் வழக்கு சொத்தும் வேறுவேறானவை.

2) 1ம் வாதி தாக்கல் செய்த அசல் வழக்கு எண் 163/2017 ல் எனது அம்மா இறந்தபின்னாடி திரும்பபெற்று வழக்கை முடித்துக்கொண்டார் என்றால் சரி. அசல் வழக்கு எண் 163/2017 ன் பட்டிகை சொத்தும் இந்த வழக்கின் பட்டிகை சொத்தும் வெவ்வேறானவை என்றால் சரி.

3) பி.வா.சா.ஆ.35 ஆவணமானது வழக்கிற்கு பின்பாக நான் உற்பத்தி செய்த ஆவணம் என்றால் சரியல்ல. வர்த்தக உரிமம் தற்போது யாருடையபெயரில் உள்ளது என்றால் மாநாகராட்சி எனக்கு தகுந்த விளக்கம் அளிக்கவில்லை அதன் தற்போதைய நிலை எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ. 36 ற்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

4) பி.வா.சா.ஆ.37 ன் வட்டாட்சியர் அனுப்பிய பதில் எதற்காக கோரப்பட்டது என்றால் எனது தாயார் இறந்த பிறகு வர்த்தக உரிமம் அவரது பெயரிலேயே தொடர்கிறதா என்று கேட்டிருந்தேன். பி.வா.சா.ஆ. 37 ஐ 8/9/2007 ல் நான் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். இந்த ஆவணத்திற்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ. 38 நகராட்சியில் இருந்து வந்த கடிதம் 16/10/2023 தேதியிட்டு எனக்கு கிடைக்கப்பெற்றது

என்றால் சரி. அந்த ஆவணத்தில் திருமண மண்டபத்திற்கான தொழில் வரி நிலுவையின்றி செலுத்தப்பட்டுள்ளது என சொல்லப்பட்டுள்ளதா என்றால் சரி.

5) பி.வா.சா.ஆ.39 ஆவணமானது 3/3/2025 ல் எனக்கு கிடைக்கப்பெற்றது என்றால் சரி. அந்த ஆவணத்தில் வசந்தா திருமணமண்டபம் பெயரில் தொழில் உரிமம் இல்லை என்று தெரிவிக்கப்பட்டது என்றால் சரி. பி.வா.சா.ஆ.40 ல் வருவாய் கோட்டாட்சியர் நடத்திய விசாரணை அதற்கு 1ம் வாதியும் 1,2 பிரதியும் கொடுத்த வாக்குமூலம் அதன் பெயரிலான உத்தரவு என்றால் சரி. வருவாய் கோட்டாட்சியர் கொடுத்த உத்தரவில் உரிய நீதிமன்றத்தில் பரிகாரம் தேடிக்கொள்ள அறிவுறுத்தப்பட்டது என்றால் சரி. இந்த வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் இருந்தபோது நான் எனது அம்மாவை தூண்டிவிட்டு மேற்படி மனுவை தாக்கல் செய்ய வைத்துள்ளேன் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.33 லிருந்து பி.வா.சா.ஆ.40 வரையிலான ஆவணம் இந்த வழக்கிற்கு தேவையில்லா தொடர்பில்லாத ஆவணம் என்றால் சரியல்ல.